குழந்தைகள் தினத்தில்

# பள்ளி மாணவர்கள் மெட்ரோ ரயிலில் பயணம்

● மெட்ரோ நிறுவனம் சிறப்பு ஏற்பாடு

சென்னை

குழந்தைகள் தினத்தையொட்டி ஆலந்தூர் நகராட்சி அரசு பள்ளி மாணவர்கள் 68 பேர் மெட்ரோ ரயிலில் நேற்று பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்தனர்.

சென்னையில் தற்போது விமான நிலையம் - சென்ட்ரல், டிஎம்எஸ் - விமான நிலையம் இடையே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் மற்றும் ரயில் நிலையங்களில் பல்வேறு சிறப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகள் குறித்து பள்ளி மாணவர்கள் அறிந்துக் கொள்ளும் வகையிலும், மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் மெட்ரோ ரயில் நிறுவனம் சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

பயணத்தின்போது, மெட்ரோ ரயில் இயக்கம், ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டுமே 3,090 மாணவர்கள் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர். அதுபோல், குழந்தைகள் தினத்தையொட்டி ஆலந்தூர் நகராட்சி அரசு பள்ளி மாணவர்கள் 68 பேர் நேற்று மெட்ரோ ரயிலில் பயணம் செய்தனர். கடந்த 44 நாட்களில் மட்டும் 4,770 மாணவர்கள் மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.